இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

---

# 1990 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டம்

---

*[1990, யூன் மாதம் 29 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1990 யூன் 29 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.50 தபாற் செலவு: ரூபா 1.55

# 1990 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டம்

[1990 யூன் மாதம் 29 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ. ஓ. 40/88

கடற்றொழிலாளர்களுக்காக ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டமொன்றைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; கமத்தொழில் காப்புறுதிச் சபையினால் இத்திட்டம் தொழிற்படுவதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். சுருக்கப் பெயரும், நடைமுறைக்கு வரும் தேதியும்.

## பாகம் I

### கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு, நலன்புரித் திட்டத்தைத் தாபித்தல்

2. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப்பாதுகாப்பு நலன்புரித்திட்டம் என அழைக்கப்படவேண்டிய (இதனகத்துப்பின்னர் "திட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) திட்டமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். கடற்றொழிலாளர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தைத் தாபித்தல்.

3. திட்டத்தின் குறிக்கோள்களாவன— திட்டத்தின் குறிக்கோள்கள்

(அ) கடற்றொழிலாளர்களுக்கு அவர்களது முதுமைக்காலத்தில் அல்லது உடற்றகுதியீனத்தின்போது சமூகப்பாதுகாப்பு வழங்குதல்;

(ஆ) கடற்றொழிலாளரின் இறப்பின்மீது, அத்தகைய கடற்றொழிலாளரின் தங்கிவாழுநர்களுக்கு நிவாரணம் வழங்குதல் ;

(இ) கடற்றொழிலாளர் தங்கள் வாழ்க்கைத் தொழிலைத் தொடருவதற்கு அவர்களுக்கு ஊக்கமளித்தல் ;

(ஈ) இளம் ஆட்களை மீன்பிடித்தொழிலில் நாட்டம் கொள்ளச் செய்தல் ; அத்துடன்

(உ) கடற்றொழிலாளர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை வளர்த்தலும் சிக்கனத்தை மேம்படுத்தலும்,

ஆகும்.

திட்டம் தொழிற் படுத்தப் படும் பிரதேசம் அமைச்ச ரால் நிர் ணயிக்கப் படுதல் வேண்டும்.

4. அமைச்சரானவர், திட்டத்தை நிருவகிப்பதற்கான சாத்தியக் கூறுகளையும், எந்தவகையான மீன்பிடித்தொழிலிலும் உள்ள தொழில் சார் தீங்கையும் கருத்திற்கொண்டு, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம், எந்தப் பிரதேசத்தில் திட்டம் தொழிற்படுதல் வேண்டுமோ அந் தப் பிரதேசத்தை தீர்மானிக்கலாம்.

திட்டத்திற் சேர்ந்து கொள்வதற் கான தகவு.

5. (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, பதினெட்டு வயதுக்குக் குறையாதவரும், ஐம்பத்தொன்பது வயதுக்கு மேற்படாத வரும் ஆன கடற்றொழிலாளர் எவரும் திட்டத்தில் சேர்ந்து கொள்வ தற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக, "கடற்றொழிலாளர்" என்பது கடலில், கடல்நீர் ஏரியில் அல்லது உண்ணாட்டு நீர்ப்பரப்பில் மீன்பிடித்து அல்லது மீன் பண்ணைத்தொழில் செய்து பிழைக்கும் எவரேனும் ஆள் எனப் பொருள்படும்.

(2) பின்வரும் ஆட்கள், திட்டத்தில் சேர்ந்து கொள்ளுவதற்கு உரித் துடையவராதலாகாது :—

(அ) அவற்றின் ஒன்று சேர்ந்த நிறை மொத்தம் ஆறு தொன்களை விஞ்சுவதாகவுள்ள மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட யந்தி ரப் படகுகளின் சொந்தக்காரர் ஒருவர் ;

(ஆ) அதன் அல்லது அவற்றின் மொத்தப் பரப்பளவு ஐந்து ஏக்கரை விஞ்சுவதாகவுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மீன் பண்ணைகளின் சொந்தக்காரர் ஒருவர்;

(இ) அவரது தொழில் காரணமாக, ஓய்வூதியம் பெறுவதற்கு அல்லது 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சகாயநிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஊழியர் சகாயநிதியத்தின் கீழான நன்மைகளைப் பெறுவதற்கு உரித்துடையவராகவிருக் கின்ற ஓர் ஆள் ;

(ஈ) வருமானவரி செலுத்துவதற்கு ஆளாகவுள்ள ஓர் ஆள் ;

(உ) ஓய்வூதியம் ஒன்றைப் பெறுபவராகவிருக்கின்ற ஓர் ஆள், அல்லது

(ஊ) அவரது வாழ்க்கைத்துணையின் இறப்பின்மீது ஓய்வூதியம் ஒன் றைப் பெறுவதற்கு உரித்துடையவராகவிருக்கின்ற ஓர் ஆள் ;

6. (1) எந்தக் கடற்றொழிலாளரொருவர், திட்டத்தில் சேருகின்றாரோ (இவர் இதனகத்துப்பின்னர் "உதவுதொகை செலுத்துநர்" எனக் குறிப்பிடுசெய்யப்படும்) அந்தக் கடற்றொழிலாளரொருவர், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய அடிப்படைமீது கணிக்கப்பட்ட திட்டத்தின்கீழான பின்வரும் நன்மைகளுக்கு உரித்துடையவராதல் வேண்டும்:— திட்டத்தின் கீழான நன்மைகள்.

(அ) விதித்துரைக்கப்பட்டவொரு தொகையாகிய காலாந்தர ஓய்வூதியமொன்று ;

(ஆ) நிரந்தரமான அரைகுறை வலுக்குறைந்தவர்களின் விடயத்தில்; குவியப் பணத்தொகைப் பணிக்கொடை அல்லது அது போமதியானதாக வரும்போது ஓர் ஓய்வூதியம்;

(இ) நிரந்தரமான பூரண வலுக்குறைந்தவர்களின் விடயத்தில், ஒரு குவியப் பணத்தொகைப் பணிக்கொடை அல்லது விதித்துரைக்கப்பட்டவொரு தொகையாகிய காலாந்தரப்படி; அல்லது

(ஈ) இறப்புப்பணிக் கொடையொன்று

(2) ஓய்வூதியமொன்றை அல்லது பணிக்கொடையைக் கணிப்பதற்கான அடிப்படையானது, ஏனையவற்றுக்கிடையில், உதவுதொகை செலுத்திய காலப்பகுதி, உதவுதொகை செலுத்துநரின் வயது, உதவுதொகை செலுத்துநரால் செலுத்தப்பட்ட உதவுதொகையின் தொகை என்பனவற்றை கவனத்திற்கெடுத்து விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

7. (1) உதவுதொகை செலுத்துநரொருவர் அறுபது வயதை எய்திய தன்மேல் ஓய்வூதியமொன்றிற்கு உரித்துடையவராதல் வேண்டும். எந்த உதவுதொகை செலுத்துநர் ஒருவர் ஐம்பத்தைந்து வயதை எய்தியதன் பின்னர் உதவுதொகை செலுத்தத் தொடங்குகின்றாரோ அந்த உதவுதொகை செலுத்துநரொருவர், எவ்வாறாயினும், விதித்துரைக்கப்படக்கூடியவாறாக, அவரது முழு உதவுதொகையையும் செலுத்தியபின்னரும் அத்துடன் சேர்ந்த தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் முடிந்தபின்னரும் மாத்திரமே ஓய்வூதியமொன்றிற்கு உரித்துடையவராதல் வேண்டும். ஓய்வூதியம் எப்போது கொடுபடற்பாலது.

(2) ஓய்வூதியமானது, எந்த மாதத்தில் உதவுதொகை செலுத்துநர் இறக்கின்றாரோ அந்த மாத முடிவு வரை கொடுக்கப்படுதல் வேண்டும்.

8. அமைச்சரானவர், திட்டத்தில் சேர்ந்துகொள்வதற்குக் கடற்றொழிலாளரை ஊக்குவிப்பதைக் கருத்திற்கொண்டு, உதவுதொகை செலுத்துநர்களினால் செலுத்தப்படவேண்டிய உதவுதொகையில் ஒரு தள்ளுபடி அல்லது கழிவொன்று செய்யப்படுதல் வேண்டுமென விதித்துரைக்கலாம். உதவு தொகை மீதான தள்ளுபடி

அரை குறை வலுக் குறைவு.

9. எந்த உதவுதொகை செலுத்துநர் அவரது ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு உரித்துடையவராக வருவதற்கு முன்னரே நிரந்தரமாகவும், அரைகுறையாகவும் வலுக்குறைந்தவராக உள்ளாரோ அந்த உதவுதொகை செலுத்துநரெவரும், தமது விருப்பத் தெரிவின்பேரில், திட்டத்தின்கீழ் விதித்துரைக்கப்பட்ட அடிப்படையில் கணிக்கப்பட்ட வலுக்குறைவுக்கான பணிக்கொடையொன்றைப் பெறுதல் வேண்டும் என்பதுடன், திட்டத்தைவிட்டு விலகுதலும் வேண்டும். அல்லது மேலும் உதவுதொகை எதனையும் செலுத்தாது திட்டத்தில் இருந்து கொண்டு, அவருக்கு ஓய்வூதியம் போமதியாகவரும்போது அதனைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

பூரண வலுக் குறைவு.

10. எந்த உதவுதொகை செலுத்துநர் அவரது ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு உரித்துடையவராக வருவதற்கு முன்னரே நிரந்தரமாகவும் பூரணமாகவும் வலுக்குறைந்தவராக உள்ளாரோ அந்த உதவுதொகை செலுத்துநரெவரும் தமது விருப்பத்தெரிவின்பேரில், திட்டத்தின்கீழ் விதித்துரைக்கப்பட்ட அடிப்படையில் கணிக்கப்பட்ட வலுக்குறைவுக்கான பணிக்கொடையொன்றைப் பெறுதல் வேண்டுமென்பதுடன், திட்டத்தைவிட்டு விலகுதலும் வேண்டும். அல்லது மேலும் உதவுதொகை எதனையும் செலுத்தாமல் திட்டத்தில் இருந்து கொண்டு விதித்துரைக்கப்பட்ட அடிப்படையில் கணிக்கப்பட்ட வலுக்குறைவுப்படியொன்றை, ஆயுட்காலம் வரை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

இறப்புப் பணிக் கொடை.

11. உதவுதொகை செலுத்துநரொருவர் அவரது ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு உரித்துடையவராக வருவதற்குமுன்பே இறக்கும் சந்தருப்பத்தில் திட்டத்தின்கீழ் இறப்புப் பணிக்கொடையானது விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய அடிப்படையின்மீது கணிக்கப்பட்டு அவரது உயிருடனிருக்கும் வாழ்க்கைத்துணைக்கு அத்துடன் அத்தகைய வாழ்க்கைத்துணையில்லாவிடின், இச்சட்டத்திற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள முன்னுரிமை ஒழுங்கின்படி அத்தகைய உதவுதொகை செலுத்துநரின் இரத்தவழி உறவினர்களுள் ஒருவருக்கு மாத்திரம் கொடுக்கப்படுதல் வேண்டும். ஏதேனும் தொகுதியில் ஒன்றுக்கு மேற்பட்ட உறவினர் இருக்குமிடத்து இளையவர்களைவிட மூத்தவர்கள் மேலாக விரும்பப்படுவர்.

## பாகம் II

### திட்டத்தின் மூகாமை

கமத் தொழிற் காப்புறுதிச் சபை திட்டத்தைத் தொழிற் படுத்தல்.

12. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்து மூன்றும் ஆண்டின் 27 ஆம் இலக்க, கமத்தொழில் காப்புறுதிச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட (இதனகத்துப்பின்னர் ' சபை ' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) கமத்தொழிற் காப்புறுதிச் சபை, அமைச்சரின் கலந்தாலோசனையுடன் திட்டத்தை முகாமைசெய்தல் வேண்டும்.

13. சபையானது, 1973 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, கமத்தொழிற் காப்புறுதிச் சட்டத்தினால் அதற்கு அளிக்கப்பட்ட தத்துவங்களுடன் மேலதிகமாகப் பின்வரும் தத்துவங்கள், பணிகள், அத்துடன் கடமைகள் என்பனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

சபையின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பன.

(அ) திட்டம் தொடர்பாக சபை அலுவல்கள், நிருவாகம் தொடர்பில் விதிகளை ஆக்குதல் ;

(ஆ) திட்டம் சம்பந்தமான ஏதேனும் கருமத்தை மதியுரைக்காக மதியுரைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தல் ;

(இ) திட்டம் தொடர்பாக தேவைப்படும் காப்பீட்டுக் கணக்குசார், நிதிசார், அத்துடன் தொழிற்பாடுசார் அறிக்கைகளைப் பேணுதல் ;

(ஈ) திட்டத்தைக் கண்காணித்தலும் அதன் பெறுமதியை மதிப்பீடு செய்தலும், அத்துடன் மீளாய்வு செய்தலும், அவசியமானவிடத்தும் அத்துடன் அவ்வாறு செய்வதற்குத் தத்துவமளிக்கப்பட்டுள்ளவிடத்தும் தொழிற்பாட்டு விதிகளில் மாற்றங்களைப் பயனுறுத்தலும்;

(உ) எவரேனும் உதவுதொகை செலுத்துநருக்கு, திட்டத்தின்கீழ் செலுத்தப்படவேண்டிய நன்மைகளைத் தீர்மானித்தல் ;

(ஊ) திட்டத்தைத் திறமையாக முகாமைசெய்வதற்கு அவசியமாகக் கூடியவர்களான அலுவலர்களையும், சேவையாளர்களையும் அத்துடன் வேறு ஊழியர்களையும் தொழிலமர்த்துதல் ; அத்துடன்

(எ) சபையின் அபிப்பிராயத்தின்படி, திட்டத்தின் தொழிற்பாட்டுக்கும் முகாமைக்கும் வசதியளிப்பதற்கு அவசியமான ஏனைய எல்லாக் காரியங்களையும் செய்தல்.

14. (1) சபையானது, 13 ஆம் பிரிவின் கீழ், அதன் தத்துவங்கள், பணிகள் அல்லது கடமைகள் என்பனவற்றுள் எதனையும் சபையின் தவிசாளருக்கு, அல்லது சபையின் வேறெவரேனும் உறுப்பினருக்கு அல்லது சபையின் எவரேனும் அலுவலருக்கு கையளிக்கலாம்.

சபையின் தத்துவங்கள், பணிகள் அத்துடன் கடமைகள் என்பவற்றைக் கையளித்தல்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ், எந்தத் தவிசாளருக்கு, உறுப்பினரொருவருக்கு, அல்லது அலுவலரொருவருக்கு சபையின் தத்துவங்கள், பணிகள், கடமைகள் என்பனவற்றுள் எவையும் கையளிக்கப்பட்டுள்ளனவோ அந்தத் தவிசாளர், உறுப்பினரொருவர் அல்லது அலுவலரொருவர் சபையின் பொதுப்பணிப்புக்கு அமைவாக அத்தகைய தத்துவங்களை, பணிகளை, அல்லது கடமைகளைப் பிரயோகித்தல், புரிதல் அல்லது நிறைவேற்றுதல் வேண்டும்.

உதவு தொகை செலுத்துநர் ஒவ்வொருவருக்கும் சபை, பூட்கை வழங்க வேண்டும் என்பது.

15. சபையானது, எவரேனும் ஆளை உதவுதொகை செலுத்துநரொருவராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டதன்மேல் அவரால் செலுத்தப்படவேண்டிய உதவுதொகைகள், பூட்கையின் நியதி நிபந்தனைகளை, அவருக்கு வழங்கப்பட்ட பூட்கையின்கீழ் அவர் எந்த நன்மைகளுக்கு உரித்தாகின்றாரோ அந்த நன்மைகள் என்பனவற்றை எடுத்துக்காட்டுகின்றதான பூட்கையொன்றை வழங்குதல் வேண்டும்.

சபை பூட்கையை இழப்பிக்கச் செய்தல்.

16. (1) உதவுதொகை செலுத்துநரொருவரால் எந்தத் தேதிக்கு முன்பு உதவுதொகைகள் செலுத்தப்படற்பாலனவோ அந்தத் தேதி, பூட்கையில் குறித்துரைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், எந்த உதவுதொகைசெலுத்துநரொருவர் தொடர்ச்சியாக பத்துத் தவணைக்கட்டணங்களைச் செலுத்துவதற்குத் தவறுகின்றாரோ அந்த உதவுதொகை செலுத்துநரெவரும், அவருக்கு வழங்கப்பட்ட பூட்கையின்கீழ் நன்மைகளை இழந்தவராதல் வேண்டும்.

(2) உதவுதொகை செலுத்துநரெவரும், அவருக்கு வழங்கப்பட்ட பூட்கையின்கீழ் நன்மைகளை இழக்குமிடத்து, சபையானது அதுபற்றிய அறிவித்தலொன்றை அத்தகைய உதவுதொகை செலுத்துநருக்கு வழங்குதல் வேண்டும்.

(3) உதவுதொகை செலுத்துநரொருவர் அவரது பூட்கையைச் செல்லுபடியாக்குமாறு சபைக்கு மேன்முறையீடு செய்வதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், சபையானது தவணைப்பணங்களைச் செலுத்தத் தவறியமைக்கான காரணங்கள் உதவுதொகை செலுத்துநரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவை என்று திருப்திப்பட்டால், பூட்கையைச் செல்லுபடியாக்குதல் வேண்டும்.

(4) சபையானது, பூட்கையொன்றைச் செல்லுபடியாக்குவதற்கு முடிவு செய்யுமிடத்து, எந்தத் தேதிக்கு முன்பு நிலுவையிலுள்ள தவணைப்பணம் செலுத்தப்படுதல் வேண்டுமோ அந்தத் தேதிபற்றி உதவுதொகை செலுத்துநருக்கு அறிவித்தல் வேண்டும். அத்தகைய கொடுப்பனவுத் தேதியே பூட்கையின் செல்லுபடித் தேதியாதல் வேண்டும்.

(5) சபையின் முடிவினால் இன்னலுறும் உதவுதொகை செலுத்துநரெவரும், அமைச்சின் செயலாளருக்கு மேன்முறையீடு செய்வதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அவரின் முடிபே முற்றானதும் முடிவானதுமாதல் வேண்டும்.

சபை அளிப்புத் தொகையைத் தீர்மானித்தல் வேண்டும்.

17. திட்டத்தின்கீழ் உதவுதொகை செலுத்துநரெவருக்குமான நன்மை அளிப்புத்தொகை, திட்டத்திற்கும், திட்டத்தைப் பயனுறுத்துவதற்கு ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் இணங்க, சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

18. (1) சபையினால் தீர்மானிக்கப்பட்ட நன்மை அளிப்புத்தொகை குறித்து எந்த உதவுதொகை செலுத்துநரொருவர் திருப்தியுறவில்லையோ, அந்த உதவுதொகை செலுத்துநரெவரும் அத்தகைய நன்மை அளிப்புத் தொகை கிடைக்கப்பெற்ற முப்பது நாட்களுக்குள்ளாக, அவரது மேன் முறையீட்டுக்கான ஏதுக்களைக் குறிப்பிட்டு, அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு மேன்முறையீடொன்றைச் செய்யலாம். மேன் முறையீடு.

(2) அத்தகைய மேன்முறையீட்டின்மேல் அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் முடிபே முற்றானதும் முடிவானதுமாதல் வேண்டும்.

(3) அமைச்சரின் அமைச்சுச் செயலாளர், 16 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப் பட்ட மேன்முறையீடொன்றின் மீதான அவரது முடிபை மேன்முறை யீட்டாளருக்கும், சபைக்கும் அறிவித்தல் வேண்டும். அத்தகைய ஒவ் வொரு முடிவையும் பயனுறுத்துதல் சபையின் கடமையாதல் வேண்டும்.

19. திட்டத்திலிருந்து கொடுபடற்பாலதான, ஓய்வூதியம், பணிக் கொடை அல்லது படியெதுவும் சாட்டப்படுதலோ அல்லது கைமாற்றப் படுதலோ ஆகாது என்பதுடன், சாட்டுதல் அல்லது கைமாற்றம் ஒவ் வொன்றும் வெற்றும் வெறிதுமாதல் வேண்டும். அத்துடன் முற்றிலும் பயனற்றதாதலும் வேண்டும். எந்த ஆளுக்கு அத்தகைய ஓய்வூதியம் அல்லது பணிக்கொடை அல்லது படி கொடுபடற்பாலதோ அந்த ஆளி னால் ஏதேனும் கடன்வகையாக அல்லது கொடுப்பனவுவகையாகப் போமதியாகவுள்ள தொகைக்காக அத்தகைய ஓய்வூதியம் அல்லது பணிக் கொடை அல்லது படியெதுவும் நடுக்கட்டுப்படுதலாகாது அல்லது நிறை வேற்றுகையில் எடுத்துக்கொள்ளப்படுதலாகாது. ஓய்வூதியம், பணிக் கொடை அல்லது படிசாட்டப் படுதலோ அல்லது விதிக்கப் படுதலோ ஆகாது

## பாகம் III

### மதியுரைக் குழு

20. (இதனகத்துப்பின்னர் குழு எனக் குறிப்பீடுசெய்யப்படும்) மதி யுரைக் குழுவொன்று இருத்தல் வேண்டும். அது பின்வரும் உறுப்பின ரைக் கொண்டிருத்தல் வேண்டும். மதியுரைக் குழு

(அ) பின்வரும் ஆறு பதவிவழி உறுப்பினர்கள், அவர்கள்—

(i) கமத்தொழில் காப்புறுதிச் சபையின் தலைவர், இச்சபையின் தலைவராக இருத்தல் வேண்டும்;

(ii) கடற்றொழில் பணிப்பாளர் அல்லது அவரது பிரதிநிதி;

(iii) ஓய்வூதியப் பணிப்பாளர் அல்லது அவரது பிரதிநிதி;

(iv) இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பிரதான காப்பீட்டாளர் அல்லது அவரது பிரதிநிதி;

(v) இலங்கை மத்திய வங்கி ஊழியர் சகாய நிதியத் திணைக் களத்தின் கண்காணிப்பாளர் அல்லது அவரது பிரதிநிதி;

(vi) தொழில் ஆணையாளர் அல்லது அவரது பிரதிநிதி.

(ஆ) பின்வருமாறு பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆறு உறுப்பினர்கள்—

(i) அமைச்சரின் பொறுப்பிலுள்ள அமைச்சிலிருந்து அவரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரிருவர்;

(ii) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் பொதுத் திறைசேரியிலிருந்து அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர்;

(iii) கமத்தொழில் காப்புறுதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் கமத்தொழில் காப்புறுதிச் சபையிலிருந்து அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் இருவர்;

(iv) சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டங்களில் பரந்த அறிவையும் அனுபவத்தையும்கொண்ட ஆட்களிடமிருந்து அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர்.

**மதியுரைக் குழு உறுப்பினர்களின் தகைமைகளும் பதவிக் காலமும்**

21. (1) ஆளொருவர்—

(அ) பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக இருந்தால் அல்லது மாகாண சபையொன்றின் உறுப்பினரொருவராகவிருந்தால்; அல்லது

(ஆ) அத்தகைய உறுப்பினர் என்றவகையில் அவரது பணிகள் அவரால் நிறைவேற்றப்படுவதனைப் பங்கமாகப் பாதிக்கும் சாத்தியம்கொண்ட அத்தகைய ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையை உடையவராக இருந்தால்,

அவர் குழுவின் உறுப்பினரொருவராகப் பெயர்குறித்து நியமிக்கப்படுவதினின்று அல்லது அவ்வாறு தொடர்ந்து இருப்பதினின்று தகைமை பற்றவராதல் வேண்டும்.

(2) குழுவின் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரொவ்வொருவரும், இறப்பினால், பதவி விலகுகையால், அல்லது பதவியகற்றுகையால் முன்னரே பதவியை வறிதாக்கினாலன்றி மூன்றாண்டு காலப்பகுதியொன்றிற்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(3) குழுவின் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் மேற்சொல்லப்பட்டவாறு முன்னரே பதவியை வறிதாக்குமிடத்து, அமைச்சரானவர், 20ஆ என்னும் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அவரது இடத்தில் வேறோர் ஆளை நியமித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய உறுப்பினர், எந்த உறுப்பினரை அடுத்தமைந்தாரோ அந்த உறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தலும் வேண்டும்.

(4) தவிசாளரானவர், ஏதேனும் காரணத்திற்காக, அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிய இயலாதவராக இருந்தால் அப்போதைக்கு கடற்றொழில் பணிப்பாளராகச் செயலாற்றுகின்றவரான ஆள் குழுவின் தவிசாளராகச் செயலாற்றுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு அவர் செயலாற்றும்போது, குழுவின் உறுப்பினரொருவராகவும் கருதப்படுதல் வேண்டும்.

(5) குழுவின் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரெவரும், சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்தினால் தற்காலிகமாக அவரது பணிகளை நிறைவேற்ற இயலாதிருந்தால், அமைச்சரானவர் 20(ஆ) என்னும் பிரிவின் ஏற்பாடுகளைக் கவனத்திற்கொண்டு, அவரது இடத்தில் செயலாற்றுவதற்கென வேறு ஆளை பெயர்குறித்து நியமிக்கலாம்.

(6) அமைச்சரானவர், அவ்வாறு செய்வது உசிதமெனக் கருதினால், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அதற்கான காரணமெதனையும் குறிப்பிடாமலே எவரேனும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரைப் பதவியகற்றலாமென்பதுடன், அத்தகைய பதவியகற்றுகை எந்த நீதிமன்றத்திலும் கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது.

(7) குழுவின் நியமன உறுப்பினரெவரும், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதமூலம் எந்த நேரத்திலும் தமது பதவியைவிட்டு விலகலாம்.

(8) குழுவின் எந்த உறுப்பினரொருவர் பதவியினின்று அகற்றப்படுகின்றாரோ அந்த உறுப்பினர் தவிர, பதவியை வறிதாக்குகின்றவரான குழுவின் உறுப்பினர் எவரும் மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

**குழுவின் தத்துவங்கள்.**

22. குழுவானது, பின்வரும் தத்துவங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் பிரயோகிக்கலாம் :—

(அ) திட்டத்தின் முகாமை, தொழிற்பாடு, செயற்படுத்தல் என்பன தொடர்பில் காலத்திற்குக்காலம் சபையினால் அதற்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றவாறான அத்தகைய கருமங்கள்மீது சபைக்கு மதியுரை வழங்குதல்;

(ஆ) சபையின் விதிகளை ஆக்குதல் தொடர்பில் சபைக்கு மதியுரை வழங்குதல்;

(இ) திட்டத்தைத் திறமையாக முகாமைசெய்தல், தொழிற்படுத்துதல், செயற்படுத்துதல் என்பனவற்றிற்காகத் திட்டத்தின்கீழ் கொள்கைகளை வகுத்தமைத்தல்;

(ஈ) திட்டத்தின் முகாமை, தொழிற்பாடு, செயற்படுத்தல் என்பன சம்பந்தமாகச் சபையின் வேலையை மீளாய்வுசெய்தல்;

(உ) திட்டத்தின் முகாமை, தொழிற்பாடு செயற்படுத்தல் என்பன சம்பந்தமாக அமைச்சருக்கு மதியுரை வழங்குதலும், விதப்புரை செய்தலும்.

குழு உறுப்பினர்களுக் கான ஊதியம்.

23. குழுவின் உறுப்பினர்களுக்குக் குழுக்கூட்டங்களுக்குச் சமூகமளித்தமைக்காக நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடனும் அமைச்சரின் அங்கீகாரத்துடனும் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் கொடுக்கப்படலாம். குழுவின் வேலை தொடர்பிலான நோக்கங்களுக்காக, உறுப்பினர்கள் உறக்கூடியவாறான அத்தகைய பயணச் செலவுகள், விடுதி வசதிச் செலவுகள் அத்துடன் ஏனைய செலவுகள் என்பன சபையினால் மீளக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

குழு தொடர்பில் அமைச்சரின் தத்துவங்கள்.

24. அமைச்சரானவர், குழுவின் தத்துவங்களைப் பிரயோகித்தல் தொடர்பில் அத்தகைய பொதுவான அல்லது சிறப்பான பணிப்புரைகளை எழுத்தில் கொடுக்கலாமென்பதுடன், குழு அத்தகைய பணிப்புரைகளைப் பயனுறுத்துதலும் வேண்டும்.

## பாகம் IV

### கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரி நிதியம்

கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரி நிதியம்.

25. (1) (இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரி நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) பின்வருவன நிதியத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) திட்டத்தைத் தொழிற்படுத்துவதற்கென காலத்திற்குக்காலம் பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளும்;

(ஆ) திட்டத்தின் நோக்கங்களுக்கென நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரால் காலத்துக்குக்காலம் சபைக்கு முற்பணமாக அளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளும்;

(இ) இச்சட்டத்தின்கீழ் சபையின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பனவற்றைப் பிரயோகிக்கையிலும், புரிகையிலும் அத்துடன் நிறைவேற்றுகையிலும் சபையால் பெற்றுக்கொள்ளப்படும் எல்லாப் பணத்தொகைகளும்;

(ஈ) உதவுதொகை செலுத்துநர்களால் உதவுதொகைகளாகத் திட்டத்திற்குச் செலுத்தப்படும் எல்லாப் பணத் தொகைகளும்;

(உ) நிதியத்திற்குக் கொடைகள், நன்கொடைகள் என்ற வகையில் ஏதேனும் மூலத்திலிருந்து பெறப்படும் எல்லாப் பணத் தொகைகளும்; அத்துடன்

(ஊ) முதலீடுகளிலிருந்து வட்டியாக அல்லது இலாபமாக உழைக்கப்படும் எல்லாப் பணத்தொகைகளும்.

(3) இச்சட்டத்தின்கீழ் குழுவினதும், சபையினதும் தத்துவங்கள் கடமைகள், பணிகள், என்பவற்றைப் பிரயோகிக்கையிலும், நிறைவேற்றுகையிலும், புரிகையிலும் குழுவினாலும் சபையினாலும் உறப்படும் ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படும் எல்லாப் பணத்தொகைகளும், அத்துடன் இச் சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின் கீழ் நிதியத்திலிருந்து செலுத்தப்படுவதற்குத் தேவைப்படும் எல்லாப் பணத் தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

26. இச்சட்டத்தின்கீழ் சபையினால் உடனடியாகத் தேவைப்படுத்தப் படாதவளவான நிதியத்திலுள்ள எல்லாப் பணங்களும், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் அதிகாரமளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதத்திலும், அத்தகைய பிணைப்பொறுப்புக்களிலும் முதலீடு செய்யப்படலாம். **நிதிகளை முதலீடு செய்தல்.**

27. (1) சபையானது, அமைச்சரினதும் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினதும் ஒருப்பாட்டுடன் அல்லது அதே போன்ற ஒருப்பாட்டுடன் கொடுக்கப்பட்டதான ஏதேனும் பொது அதிகாரத்தின் நியதிகளுக்கிணங்க, இச்சட்டத்தின்கீழ் சபையின் கடப்பாடுகளைச் சமாளிப்பதற்கு அல்லது திட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காகச் சபைக்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளை மேலதிகப் பற்றுவகையாக அல்லது வேறு வகையாகக் கடனாகப் பெறலாம் அல்லது பேச்சுவார்த்தை மூலம் இணங்கிக் கடனாகப் பெறலாம் : **சபையின் கடன் பெறுவதற்கான தத்துவம்.**

ஆயின், இவ்வுட்பிரிவின்கீழ் சபையால் திரட்டப்பட்ட கடன்கள் தொடர்பில் நிலுவையாகவுள்ள தொகைகளின் கூட்டுமொத்தம், எந்த நேரத்திலும், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத் தொகைகளை விஞ்சுதலாகாது.

(2) சபையானது, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் கொடுக்கப்பட்ட சம்மதத்துடன், பின்வரும் எல்லா நோக்கங்களுக்காகவும் அல்லது அவற்றுள் ஏதேனும் ஒன்றிற்காக, (1) ஆம் உட்பிரிவின் கீழான கடன்கள் என்ற வகையாகவல்லாது வேறுவகையாகப் பணத்தைக் கடனாகப் பெறலாம் ;—

(அ) திட்டத்தின் நோக்கங்களுக்கென சபையின் பயன்பாட்டுக்குத் தேவைப்படும் ஏதேனும் அசைவுள்ள, அல்லது அசைவற்ற ஆதனத்தைத் தேவைக்கெடுத்தல் அல்லது அதனைக் கொள்ளுதல் ;

(ஆ) ஓராம் உட்பிரிவின்கீழ் கடனாகப் பெற்ற ஏதேனும் பணத்தை மீளச் செலுத்துதல்.

நிதியண்டு முதலியன

28. (1) திட்டத்தின் நிதியாண்டானது பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) சபையானது, ஒவ்வோர் ஆண்டிலும், திசெம்பர் முப்பத்தோரம் தேதி அதன் கணக்குகளை மூடிக்க வேண்டுமென்பதுடன், அடுத்த ஏப்பிரல் முப்பதாம் தேதிக்கு முன்பு, முதலில் கூறப்பட்ட தேதிவரையிலான வரவு, செலவு கணக்கையும், நிதியத்தின் சொத்துக்களினதும், பொறுப்புகளினதும் சுருக்கமொன்றைக் கொண்ட ஐந்தொகையையும், அத்துடன் முதலில் கூறப்பட்ட தேதியன்று, உள்ளவாறு முதலீட்டிற் கொள்வனவு விலையையும் சந்தை விலையையும் எடுத்துக்காட்டுவதாக நிதியப் பணத்தின் அத்தகைய முதலீடுகள் பற்றியவொரு கூற்றையும் தயாரிக்கச் செய்தல் வேண்டும்.

(3) வரவு, செலவுக் கணக்கும் அத்துடன் ஐந்தொகையும் சபையின் தீர்மானமொன்றினால் அவ்வாறு செய்யும்படி அதிகாரமளிக்கப்பட்டவரான சபையின் உறுப்பினரால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

(4) கணக்காய்வாளர் தலைமையதிபதியானவர், அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரைக்கிணங்கத் திட்டத்தின் கணக்குகளை ஒவ்வோராண்டும் கணக்காய்வு செய்தல் வேண்டும்.

## பாகம் V

## பொது

ஒழுங்கு விதிகள்.

29. (1) அமைச்சரானவர், இச்சட்டத்தினால் எக்கருமங்கள் தொடர்பாக ஒழுங்குவிதிகள் விதித்துரைக்கப்பட வேண்டுமென சொல்லப்பட்டனவோ அல்லது தேவைப்படுத்தப்பட்டனவோ அல்லது எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டனவோ அக் கருமங்கள் தொடர்பில், பின்வருவன உட்பட ஒழுங்கு விதிகளை ஆக்கலாம் :—

(அ) திட்டத்தின் ஒழுங்கமைப்பு, நிருவாகம் அத்துடன் முகாமை;

(ஆ) எவரேனும் கடற்றொழிலாளர் திட்டத்தில் சேர்ந்து கொள்வதற்கு அவரைத் தகுதியுடையவராக்கும் தகைமைகளும், நிபந்தனைகளும், சூழ்நிலைகளும் கட்டுப்பாடுகளும் ;

(இ) உதவு தொகை செலுத்துநர்களினால் அளிக்கப்பட வேண்டிய உதவுதொகைபற்றிய தீர்மானம்;

(ஈ) திட்டத்தின்கீழ் எந்த அடிப்படையில் உதவு தொகை செலுத்துநர்களுக்கு ஓய்வூதியங்கள், பணிக்கொடைகள்,அல்லது படிகள் செலுத்தப்படற்பாலனவோ அந்த அடிப்படையைத் தீர்மானித்தல் ;

(உ) உதவுதொகைகளின் கொடுப்பனவுத் தவறுகையை ஆளும் நிபந்தனைகள், பூட்கையை ஒப்படைத்தல், அத்துடன் உதவுதொகை செலுத்துநரொருவரின் தகைமையிழப்பு ;

(ஊ) சபை அல்லது குழு அலுவல்களைக் கொண்டு நடாத்துவதற்கான நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்தல்;

(எ) பூட்கையை முடிவுறுத்தல் அல்லது இழக்கச் செய்தல், அத்துடன்

(ஏ) பகுதியளவிலான அல்லது முழுமையான வலுக் குறைவைத் தீர் மானிப்பதற்கான அடிப்படை.

(2) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதியொவ்வொன்றும், கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அத்தகைய ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது கசெற்றில் வெளியிடப்பட்டபின்னர், வசதியாகக்கூடியளவு விரைவில் அங்கீகாரத்திற்காகப் பாராளுமன்றத்தின் முன் கொண்டுவரப்படுதல் வேண்டும். எந்த ஒழுங்குவிதி அவ்வாறு அங்கீகரிக்கப்படவில்லையோ அந்த ஒழுங்குவிதி எதுவும், அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, நீக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். எந்தத் தேதியன்று ஒழுங்குவிதியொன்று நீக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றதோ அந்தத் தேதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின் மேல் எடுக்கப்படும் நடவடிக்கைக்கான பாதுகாப்பு.**

30. (1) (அ) இச்சட்டத்தின்கீழ் சபையினால் அல்லது குழுவினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட ஏதேனும் செயலுக்காக, சபைக்கு அல்லது குழுவுக்கு எதிராக, அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது, சபையின் அல்லது குழுவின் எவரேனும் உறுப்பினரால், அலுவலரால், சேவையாளரால் அல்லது சபையின் முகவரால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக்கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக, அவருக்கெதிராக,

தொடர்ச்சி, அல்லது குற்றவழக்கு எதுவும் தொடுக்கப்படுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் குறிப்பீடு செய்யப்படுகின்றவரான அத்தகைய ஆளினால், இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது செய்யப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய ஆளினால் உறப்படும் செலவு எதுவும், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்ப்பளிப்பின், நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

தவறுகள்.

31. இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியினை மீறுகின்றவரான அல்லது அவற்றுடன் இணங்கியொழுகத் தவறுகின்றவரான ஆளொவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான குற்றத்தீர்ப்பின்மீது, ஆறுமாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஆயிரத்து ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

ஒவ்வாமை காணப்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

32. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஒவ்வாமை காணப்படும் சந்தர்ப்பத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள் கோடல்.

33. இச்சட்டத்தில், சந்தருப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி—

"விதித்துரைக்கப்பட்ட" என்பது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியால் விதித்துரைக்கப்பட்டது என்று பொருளாகும்.

## அட்டவணை

(பிரிவு 11)

முன்னுரிமை வரிசையில் இரத்தவழி உறவினர்களின் ஒழுங்குவரிசை.

(1) மகன்மார்

(2) மகள்மார்

(3) பேரன்மார்

(4) பேத்திமார்

(5) தகப்பன்

(6) தாய்

(7) சகோதரன்மார்

(8) சகோதரிமார்

(9) தாய் தந்தையரின் சகோதரர்கள்

(10) தாய் தந்தையரின் சகோதரிகள்

(11) சகோதர, சகோதரிகளின் மகன்மார்.

(12) சகோதர, சகோதரிகளின் மகள்மார்.